I Additional District Court, Thoothukudi.

SC.No.166/2024 நாள் : 10.12.2024 அ.சா.1– திரு.மாணிக்கராஜா.

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

என் தகப்பனார் 2ம் எதிரிக்கு கொடுத்த வரவு செலவு கணக்குகளை எழுதி வைத்திருந்த டைரிகள் **அ.சா.ஆ 2 மற்றும் 3.** இந்த ஆவணங்களை எழுதியவர் இந்த சாட்சியல்ல என்று 2ம் எதிரி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது. என் தகப்பனார் வரவு செலவு கணக்குகளை எழுதி வைத்திருந்த ஸ்பைரல் பைண்டிங் **அ.சா.ஆ 4**. என் தகப்பனார் ஒரு பத்திரத்தின் ஒளிநகலில் எழுதி வைத்திருந்த வரவு செலவு கணக்கு **அ.சா.ஆ 5**. என் தகப்பனாரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதால் மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்து என் தகப்பனாருடையது என்று கூறுகிறேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை நான்கு முறைக்குமேல் விசாரித்தார்கள். 21.06.2024 அன்று 4 வது முறையாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அசா.ஆ 2 முதல் 5 ஆவணங்களை தற்போதுதான் முதல்முறையாக நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் அவற்றை நான்தான் போலீசாரிடம் கொடுத்தேன். என்னை கடைசியாக விசாரித்த தேதியான 21.06.2024ல் அவற்றை நான் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் 05.04.2024 அன்று ஒப்படைத்தேன். என் தகப்பனார் படிக்கவில்லை. அவருக்கு தினமும் டைரி எழுதும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. அவர் நிதி நிறுவனம் நடத்தியதால் டைரி எழுதும் பழக்கம் உண்டு. என் தகப்பனாருக்கு எல்லா நாட்களும் வரவு செலவு இருக்கும் என்றால் சரிதான். எல்லா நாட்களின் வரவு செலவுகளையும் அவர் எழுதுவார் என்றால் சரிதான். அ.சா.ஆ 2ல் என் தகப்பனாரின் எல்லா நாட்களின் வரவு செலவுகளையும் எழுதவில்லை என்றால் தவறு. அ.சா.ஆ 3 டைரியிலும் என் தகப்பனாரின் எல்லா நாட்களின் வரவு செலவுகளையும் எழுதவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 3 டைரி 2015ம் ஆண்டுக்கான டைரி என்றால் சரிதான்.

அதில் எழுதப்பட்டுள்ள வரவுகள் 2023ம் ஆண்டிற்கான வரவுகள் என்றால் சரிதான். அ.சா.ஆ 2, 2022ம் ஆண்டிற்கான டைரி என்றால் சரிதான். அதில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் எல்லாம் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனாரின் வரவு செலவுகளுக்கு தனி அலுவலகம் உள்ளது என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவரது தனிப்பட்ட பிரோவில் வைத்து பூட்டி வைத்திருப்பார் என்றால் சரிதான். அதற்கான சாவியை என் தகப்பனார் பாதுகாப்பாக அவரே வைத்திருப்பார் என்றால் சரிதான். என் தகப்பனார் விபத்து சமயத்தில் தன்னிடம் பராமரித்து வந்த மற்ற ஆவணங்களையும், கைபேசியையும், பிரேத பரிசோதனைக்கு பிறகு எங்களிடம் போலீசார் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 3ல் முதல் தாளில் உள்ள வாசகங்கள் மூன்று கையெழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை நான் போலீசாரிடம் ஒப்படைத்ததற்கு போலீசார் எனக்கு ஏதாவது ஆவணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடமிருந்து மேற்படி ஆவணங்களை போலீசார் பெற்றுக் கொண்டதாகவும், நான் எந்த ஆவணத்திலும் கையொப்பமிட்டு கொடுக்கவில்லை. அ.சா.ஆ 5ல் சில தொகைகள் அடிக்கப்பட்டும், சில தொகைகள் திருத்தப்பட்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ 5ல் ஒளிநகலில் உள்ள சொத்து ஏழாயிரம் பண்ணை சாலையில் உள்ள சொத்து என்றால் அப்பனேரியில் உள்ள சொத்து குறித்து எழுதப்பட்டது. அந்த ஆவணத்தில் உள்ள சொத்து என் தகப்பனார், திருமுருகன் பேருந்து உரிமையாளருக்கு விற்பதாக ஒப்புக் கொண்டு அவரிடமிருந்து ரூபாய் 50 லட்சம் பெற்றுக் கொண்டதாக எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் ஒப்பந்தம் படி நடக்காமல் அதே சொத்தை ஒரு நடராஜன் என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் மீதும், நடராஜன் மீதும் மேற்படி பேருந்து உரிமையாளர் துத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.2/2020 தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு

தெரியாது. அந்த வழக்கில் என் தகப்பனார் இறந்தபிறகு நாங்களும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் வில்லங்கச் சொத்துக்களை வாங்குவதின் மூலமும், பிறருக்கு சொத்துக்களை கிரையம் செய்தததில் மோசடி செய்தததின் மூலமும் என் தகப்பனார் பல நபர்களிடம் விரோதத்தை சம்பாதித்துள்ளார் என்றால் சரியல்ல. என் சகோதரிக்கு என் தகப்பனார் வங்கி கொடுத்த வீட்டில் இருந்த பிரச்சனை சம்பந்தமாக என் தகப்பனார் இறப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு என் தகப்பனார் மேற்படி வீட்டை மோசடி செய்து எழுதி வாங்கி விட்டதாக காவல்நிலையத்தில் விசாரணை நடந்தது என்றால் சரியல்ல. நான் வேலையில்லாமல் இருக்கிறேனா என்றால் இல்லை. என் தகப்பனார் பண விசயத்தில் எங்களிடம் கராராக இருப்பார் என்றால் சரிதான். எது கேட்டாலும் உடனே வாங்கி கொடுக்கமாட்டார். அதனால் என் தகப்பனாருக்கும், எங்களும் இடையில் ஒரு சுமூக உறவு இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. அவரது வரவு செலவுகளை பற்றி என்னிடமும், என் தாயாரிடமும் வெளிப்படையாக சொல்லமாட்டார். என் தகப்பனாருக்கு வெளிப் பழக்க வழக்கம் அதிகமாக இருந்ததால் என் பெற்றோருக்கு இடையில் சுமூக உறவு இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணா நகரை சேர்ந்த பத்மாவதி என்பவர் என் தகப்பனார்மீது புகார் கொடுத்து விசாரணை நடந்தது என்றால் தவறு. என்ன காரணத்திற்காக விசாரணை நடந்தது என்றால் அப்படி ஒரு விசாரணை நடக்கவே இல்லை. மேற்படி பத்மாவதி உடன் என் தகப்பனாருக்கு நெருக்கமான தொடர்பு இருந்ததால் எங்கள் குடும்பத்துடன் என் தகப்பனார் சுமூகமாக இருந்ததில்லை என்றும், இரவில் படுப்பதற்கு மட்டுமே எங்கள் வீட்டிற்கு வருவார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி பத்மாவதிக்கு என் தகப்பனார் சொத்து வாங்கி கொடுத்து அதன் காரணமாக எங்கள் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டு எங்கள் குடும்பம் அழுத்தம் காரணமாக மேற்படி பத்மாவதியுடன் என் தகப்பனார் சொத்துக்களை திரும்ப கேட்டதால் பத்மாவதிக்கும், என் தகப்பனாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. கிருஷ்ணா நகரில்

எங்களுக்கு வீடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ 2 முதல் 5 ஆவணங்களில் உள்ள பதிவுகள் என் தகப்பனாரால் எழுதப்பட்டதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் எதிரிக்கு எதிராக ஒரு வழக்கை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நானும், அசா1ம், எங்களுக்கு சாதகமாக இருந்த ஆய்வாளர் முருகன் என்பவரும் சேர்ந்து கொண்டு ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் குற்றச்சாட்டு குறித்த பதிவுகள் மட்டுமே மேற்படி ஆவணங்களில் எழுதப்பட்டுள்ளது என்றும், அனைத்து பதிவுகளும் எழுதப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் கைப்பட எழுதிய ஆவணங்கள் எங்கள் வீட்டில் உள்ளது. அவற்றை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் அ.சா.ஆ 2 முதல் 5 தவிர வேறு ஆவணங்கள் வீட்டில் இல்லை. 01.04.2024 அன்று என் தகப்பனாருக்கு 2ம் எதிரி கைபேசி மூலம் 6.45 மணியளவில் குறிப்பிட்ட இடத்திற்கு எட்டையபுரத்திற்கு வந்து பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு கைபேசி மூலம் என் தகப்பனாருக்கு தகவல் சொன்னதாக நான் போலீசாரிடம் சொன்னேன். நான் வீட்டிற்கு போனபோது என் தகப்பனார் தவறிவிட்டதாக என் அக்கா சொன்னதாகவும், நான் எட்டையபுரம் காவல்நிலையம் சென்று 2ம் எதிரியிடம் கேட்டதாகவும், அப்போது 2ம் எதிரியுடன் அவரது உறவினர்கள் ஆகியோரும், என் தகப்பனாரின் நண்பர் ரவிக்குமார் ஆகியோரும் உடனிருந்தார்கள் என்று போலீசாரிடம் சொன்னேன். மீனாட்சி அம்மன் படம்போட்ட ஒரு நீலநிற டைரியில் எந்த எந்த தேதியில் எவ்வளவு பணம் என் தகப்பனார் கொடுத்தார் என்பதை எழுதி வைத்திருந்தார் என்றும், ஒரு பத்திரத்தின் ஒளிநகல் இருந்தது என்றும், அதில் ரூபாய் இரண்டு கோடியே பத்துலட்சம் 2ம் எதிரியிடம் என் தகப்பனார் கொடுத்திருந்தார் என்று எழுதி வைத்திருந்ததாகவும் போலீசாரிடம் நான் சொன்னேன். நான் யாருக்கு எதிராக சாட்சி சொல்கிறேனோ அவர்கள் இன்றும் நீதிமன்றத்தில் இல்லை. கடந்த வாய்தாவில் சாட்சியம் அளிக்கும்போதும் நீதிமன்றத்தில் இல்லை. என் தகப்பனார் இருந்தவரையில் எனக்கும், அவருக்கும் பிடித்தம் இல்லாமல் இருந்ததால் விபத்தினால் அவர்

இறந்ததை சாதகமாக்கி கொண்டு 2ம் எதிரி மீது அசா1 உடன் சேர்ந்து கொண்டு தவறான ஆவணங்களை ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி விபத்து நடந்தது குறித்து கைபேசி மூலமாக என்னிடம் சொன்னதை தவிர முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள இதர சங்கதிகள் நான் கேள்விப்பட்டவை என்றால் சரிதான். போலீசார் என்னை நான்கு முறைக்கு மேல் விசாரித்தார்கள். ஒவ்வொருமுறையும் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் போலீசார் எழுதிக் கொண்டார்களா என்றால் இல்லை. முதன்முதலில் 01.02.2024 அன்று காவல்நிலையம் சென்றேன். இரவு 8 மணியளவில் சென்றேன். நான் கோவில் கொடையில் இருக்கும் போது என் தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் வந்தது என்றால் சரிதான். எங்கள் சொந்த ஊரான களப்பாலன்குளம் காளியம்மன் கோவில் கொடையில் இருந்தேன். காளியம்மன் கோவில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் ஊருக்கு பாத்தியப்பட்டது. அசா1ம் அந்த கோவிலில் வழிபாடு செய்வார். 01.04.2024 அன்று அசா1 கோவில் கொடைக்கு வரவில்லை. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாக 1, 3 எதிரிகளை எனக்கு தெரியாது. 02.04.2024ல் நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதனால் 01.04.2024க்கு பிறகு நான் மேற்படி காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். 05.04.2024 அன்று அசாஆ2 முதல் 5 ஆவணங்களை கொடுப்பதற்காக காவல்நிலையம் சென்றேன். 01.04.2024 அன்று 2ம் எதிரியை போலீசார் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்துவதற்காக நிலையத்திலேயே கைது செய்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. களப்பாலன்குளத்திற்கும், எட்டையபுரத்திற்கும் இடையில் சுமார் 50 கி.மீ தூரம் இருக்குமா என்றால் அதிகமாக இருக்கும். பேருந்தில் சென்றால் ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் ஆகும். இருசக்கர வாகனத்தில் சென்றால் ஒரு மணிநேரத்திற்கு மேல் ஆகும். 01.04.2024 அன்று தகவல்

கிடைத்தவுடன் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. காலை சுமார் 8.45 அல்லது 9 மணிக்குள் மருத்துவமனைக்கு போனேன். 01.04.2024, 02.04.2024, 05.04.2024 தேதிகளில் போலீசார் என்னை விசாரித்தாக சொல்லும் நேரங்களில் அசா1 என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. அசா1 நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும் நேரத்தில் நானும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தேன். இந்த வழக்கின் சாட்சிகளான அருண் ராஜேஷ்குமார் மற்றும் மணிகண்டன் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனாரின் வரவு செலவுகளை அசா1 தான் பார்த்து வருகிறார் என்றால் இல்லை. நான்தான் பார்த்து வருகிறேன். அசா1 ன் ஆலோசனையின்பேரில் நான் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் தொழிலை தற்போது அசா1 தான் பார்த்து வருகிறார் என்றும், நான்தான் அசா1 க்கு துணையாக இருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பட்டயம் முடித்துள்ளேன். தொழிலுக்காக நான் அசா1 னிடம் நான் ஆலோசனை செய்வேன் என்றால் சரிதான். அசா1 ன் ஏற்பாட்டின் பேரில் நான் குடும்பத்தை பகைத்துக் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2024.12.10 19:20:01 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.